**தலைப்பு 323 – சட்ட அலுவல்கள் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2017 ஆம் ஆண்டிற்கான அறிக்கை**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது பட்டோலையிலும் இரண்டாவது பட்டோலையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கத்தின் கீழான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்று என்பன சட்ட அலுவல்கள் திணைக்களத்தினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலும் இணக்கக்கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிப்பொறுப்பு தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தினால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வில் நோக்கெல்லை**

---

தலைப்பு 323 – சட்ட அலுவல்கள் திணைக்களத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 ஜுலை 20 ஆந் திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள்,

காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக சட்ட அலுவல்கள் திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.4 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப்பிரமாணம் 128(1) இன் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிப்பொறுப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரினால் ஏற்பாடுகளுடன் இணக்கம் காணப்படாமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்திக்கான தொடர்பு |
|---|---|---|---|
| **நிதிப்பிரமாணம்** | | | |
| 128(1)(அ) | அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்டு காட்டப்பட்டுள்ள கொள்கைகள் மற்றும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடுகளை வழங்கி கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களைக் கவனத்தில் கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகளை வெளிப்படைத் தன்மையுடன் திட்டமிட்டு செயற்படுத்துவதற்கும் மற்றும் நடப்பாண்டிற்காக நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை பூரணப்படுத்துவதற்கு மற்றும் / அல்லது நிர்ணயித்த இலக்குகளை நிறைவேற்றுவதற்கு முயற்சிகள் எடுத்தல். | 1. செயல்நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட்டிராமை. | 2.2.1 |
| | | 2. மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமை. | 2.3 |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(உ) | அரசாங்கத்திற்குச் சொந்தமான அல்லது அரசாங்கத்தின் பொறுப்பில் பேணப்படுகின்ற பணம், பொருட்கள், உபகரணம் மற்றும் ஏனைய சொத்துக்களை பாதுகாப்பாக வைத்திருத்தல் மற்றும் பேணிப் பாதுகாப்பதற்காக போதியளவும் முறையானதுமான ஒழுங்குவிதிகள் பயன்படுத்தப்படுதல், அவை காலத்துக்குக் காலம் மெய்மையாய்வு செய்யப்படுகின்றன என்பதுவும் அவை முறைப்படியாக அகற்றப்படுகையில் அவ்வாறு அகற்றப்படுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட ஒழுங்கு விதிகளுக்கும் ஆலோசனைகளுக்கும் இணங்க செய்யப்படுகின்றமை. | சொத்துக்கள் முகாமைத்துவத்திலான குறைபாடுகள் | 2.2 |

## 2. பொருண்மையான மற்றும் முக்கியத்துவம்வாய்ந்த கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 செயலாற்றல்

**திட்டமிடல்**

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

**சொத்துக்களை பதிவு செய்தல்**

2017 யூலை 28 ஆந் திகதிய 01/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் கொம்ப்ரோலர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள சொத்துக்களின் பெறுமதி மற்றும் ஒதுக்கீட்டுக் கணக்கின் டீ.ஜீ.எஸ்(1) மாதிரிக்கமைய நடைமுறையல்லாத சொத்துக்களின் அசைவு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதி ஆகியவற்றுக்கிடையே ரூபா 2,871,149 ஆன வேறுபாடொன்று நிலவியது. 2008 ஆம் ஆண்டு முதல் தீர்க்கப்படாத மீதிகள் தொடர்ந்தும் ஒதுக்கீட்டுக் கணக்கில் உள்ளடங்கியுள்ளதாகவும், கொம்ப்ரோலர் நாயகத்திற்கு பௌதீக ரீதியாக இனங்காணப்பட்டுள்ள சொத்துக்களின் பெறுமதிகள் மாத்திரம் அறிக்கையிடப்பட்டுள்ளதாக பணிப்பாளர் நாயகம் கணக்காய்விற்கு அறிவித்திருந்தார்.

### 2.3 கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டை பயன்படுத்துதல்

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த 05 ஆண்டுகள் காலப்பகுதியினுள் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடு, பயன்பாடு, சேமிப்பு என்பன தொடர்பான

தகவல்கள் மற்றும் மீளாய்வாண்டின் தகவல்களுக்குரிய கணக்காய்வு அவதானிப்புகள் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | செலவு வகை | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| **2013** | மீண்டுவருபவை | 13.465 | 12.847 | 0.618 | 4.59 |
| | மூலதனம் | 0.900 | 0.358 | 0.542 | 60.22 |
| | **மொத்தம்** | **14.365** | **13.205** | **1.160** | **8.08** |
| **2014** | மீண்டுவருபவை | 17.530 | 17.168 | 0.362 | 2.07 |
| | மூலதனம் | 0.650 | 0.281 | 0.369 | 56.77 |
| | **மொத்தம்** | **18.180** | **17.449** | **0.731** | **4.02** |
| **2015** | மீண்டுவருபவை | 19.035 | 11.087 | 7.948 | 41.75 |
| | மூலதனம் | 1.065 | 0.798 | 0.267 | 25.07 |
| | **மொத்தம்** | **20.100** | **11.885** | **8.215** | **40.87** |
| **2016** | மீண்டுவருபவை | 9.970 | 9.632 | 0.338 | 3.39 |
| | மூலதனம் | 0.680 | 0.646 | 0.034 | 5.00 |
| | **மொத்தம்** | **10.650** | **10.278** | **0.372** | **3.49** |
| **2017** | மீண்டுவருபவை | 10.238 | 8.931 | 1.307 | 12.77 |
| | மூலதனம் | 0.900 | 0.130 | 0.770 | 85.55 |
| | **மொத்தம்** | **11.138** | **9.061** | **2.077** | **18.65** |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமை**

மீளாய்வாண்டின் போது 07 செலவின விடயங்களுக்காக ரூபா 1.15 மில்லியன் மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமையால், அந்த செலவின விடயங்களுக்குரிய நிதியேற்பாடுகளில் ரூபா 0.88 மில்லியன் கூட்டுத்தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், சேமிப்பானது அந்த செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேறிய நிதியேற்பாட்டில் 23 சதவீதம் 78 சதவீத வரையான வீச்சினைக் கொண்டிருந்தது.

## 2.4 மனிதவள முகாமைத்துவம்

திணைக்களத்தினால் தமது கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளவாறான பதவியணியினர் மற்றும் வெற்றிடங்கள் தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன. மீளாய்வாண்டிற்கான தனிநபர் ஊதிய செலவின தொகுதிக்காக ரூபா 7.046 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதற்கமைய, வருடாந்த ஆளணி வேதன செலவினம் ரூபா 587,167 ஆகக் காணப்பட்டது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 14 | 04 | 10 |
| (ii) | இரண்டாம் மட்டம் | 01 | - | 01 |
| (iii) | மூன்றாம் மட்டம் | 05 | 04 | 01 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 03 | 04 | 01 |
| | **மொத்தம்** | **25** | **12** | **13** |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) தேவைக்கு அதிகமாக பதவியணியினரை அங்கீகரித்துக்கொள்ளல்**

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கமைய 2018 மே 21 ஆந் திகதி முதல் பதவியணியில் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டதாகவும், அதற்கமைய மொத்தப் பதவியணியானது 19 வரை குறைக்கப்பட்டுள்ளதாக பணிப்பாளர் நாயகம் கணக்காய்விற்கு அறிவித்திருந்தார்.

**(ஆ) பதவியணியினருக்கு பயிற்சியளித்தல்**

(i). ஊழியர்களை உரிய முறையில் பயிற்றுவிக்கும் தேவைப்பாடொன்று காணப்பட்ட போதிலும், திணைக்களத்தினால் மூன்று உத்தியோகத்தர்களுக்காக ஆகக் குறைந்தது வருடமொன்றிற்கு 08 மணித்தியாலங்களேனும் பயிற்சி வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ii). கடந்த 05 வருடங்களினுள் பயிற்றுவிக்கும் நடவடிக்கைகளுக்காக ரூபா 1,415,000 கூட்டுத்தொகையான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அந்த நிதியேற்பாட்டில் ரூபா 766,718 கூட்டுத்தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. 2013 ஆம் ஆண்டின் போது பயிற்றுவிப்பதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்த தொகையும் பயன்படுத்தப்பட்டிராததுடன், 2015 மற்றும் 2014 ஆகிய வருடங்களில் முறையே 50 சதவீதம் மற்றும் 51 சதவீதம் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. 2012 ஆம் ஆண்டின் போது உரிய நிதியேற்பாட்டில் 31 சதவீதம் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் போதும் 33 சதவீதம் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.